DINAMANI 25 SEP 2010

## ஈஷா யோகா மையம் சார்பில்

# நாளை 'பசுமை மதுரை இயக்க' விழா

**மதுரை, செப்.24:** 'பசுமை மதுரை இயக்கத் தொடக்க விழா மதுரையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. இந்த விழாவை, ஈஷா யோகா மைத்தைச் சேர்ந்த சத்குரு ஜகி வாசுதேவ் தொடங்கி வைக்கிறார்.

இதுகுறித்து ஈஷா யோகா மையத்தின் தென் மாவட்டங்களுக்கான நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.ரமேஷ் கூறியதாவது:

ஈஷா பசுமைக்கரங்கள் திட்டம் என்பது சத்குருவின் எண்ணத்தில் தோன்றி உருவாக்கப்பட்ட ஒரு மாபெரும் மரம் நடும் இயக்கமாகும். இத்திட்டம், மக்களின் இயக்கமாக மரங்களை நட்டு வளர்ப்பதன் மூலம் தேசிய கொள்கையான 33 சதவீதம் பசுமைப் பரப்பை உருவாக்க முனைந்துள்ளது.

இதன்மூலம் 11.4 கோடி மரக்கன்றுகளை வரும் 2015-ம் ஆண்டுக்குள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 2006-ம் ஆண்டில் ஒரே நாளில் 8 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டது. தமிழகத்தில் வரும் 3 மாதங்களில் 16 இடங்களில் மரக்கன்றுகளை இயக்கமாக ஆரம்பித்து நடப்பட உள்ளது.

மதுரையில் செப். 26 மாலை 6 மணியளவில் சத்குரு ஜகி வாசுதேவ் பங்கேற்கும் ஆனந்த அலை நிகழ்ச்சி நடைபெறுகிறது. அப்போது, பசுமை மதுரை இயக்கத் தொடக்க விழா நடைபெறுகிறது.

இந்த விழாவில் மதுரை மாவட்ட ஆட்சியர் சி.காமராஜ், தென்மண்டல காவல்துறைத் தலைவர் எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, மதுரை மேயர் கோ.தேன்மொழி உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர்.

இந்த விழாவுக்கு சுமார் 25 ஆயிரம் பேர் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம். அவ்வாறு வருவோர் அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கிட உள்ளோம். மேலும், மரக்கன்றுகளைப் பெற்றுச் செல்வோரிடத்தில் விண்ணப்பம் வழங்கப்பட்டு அதைத் தொடர்ந்து முறையாகப் பராமரிக்க 20 பசுமைக் காவலர்கள் மூலம் உரிய பணிகளும் மேற்கொள்ளப்படும்.

இந்த மரக்கன்றுகள் ஈஷா யோகா மையங்கள் மற்றும் தொண்டர்களின் தோட்டங்களில் வளர்க்கப்பட்டு வழங்கப்படுகிறது. மதுரையில் இந்தாண்டு இறுதிக்குள் 1 லட்சம் மரக்கன்றுகளை பசுமைக் கரங்கள் இயக்கம் மூலம் வளர்த்து வழங்கிட உள்ளோம் என்றார் அவர்.